சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

“உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்
182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”

27.11.2024 - புதன்கிழமை

வ.எண்	சொற்பொழிவாளர்கள்	இடம்	தலைமை
1.	பா.தாயகம் கவி கா.காயத்திரி	142 அ வட்டம் - கே.பி.கோயில் தெரு,	வீடியோ எஸ்.எழில் வட்ட து.செயலாளர்
2.	புதுக்கோட்டை விஜயா ச.அஜித்குமார்	127 வட்டம் - பஜனைக்கோயில் தெரு, கோயம்பேடு.	பொன்.வர.லோகு வட்டச் செயலாளர்
3.	ஈரோடு இறைவன் செ.தமிழரசன்	173 அ - இந்திரா நகர்	மு.ப.நடராஜன் மா.து. அமைப்பாளர் இலக்கிய அணி
4.	வி.பி.ராஜன் விஜயகுமார்	182 வட்டம் - அண்ணா நெடுஞ்சாலை கந்தன்சாவடி	மா.ஆறுமுகம் வட்டச் செயலாளர்
5.	நெல்லிகுப்பம் புகழேந்தி மாறன்	91 வட்டம் - முகப்பேர் மேற்கு பேருந்து நிலையம்	எம்.கே.பி.அண்ணாதாசன் வட்டச் செயலாளர்
6.	சைதை சாதிக் எஸ்.விக்டோரியா	தாமஸ்மலை ஒன்றியம் - கோவிலம்பாக்கம் ஊராட்சி	எஸ்.கே.சீனிவாசன் அயலக அணி - மா.து.அ

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து!

சென்னை, நவ.27-

களங்களை கழகக் கொள்கைத் தளங்களாக்கி முழக்கமிடும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார்” என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்து அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு தி.மு.க. அரசின் துணை முதலமைச்சரும், தி.மு.க.வின் ஆற்றல்மிகு இளைஞரணி செயலாளரும், சீரிய பகுத்தறிவாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (27.11.2024) 48ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவாகும்.

புத்தாக்க உலகை உருவாக்குவதற்கே!

அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் சொல்வதுபோல், பிறந்த நாளை பகுத்தறிவாளர்களும், திராவிடர் இயக்கத்தவர்களும் கொண்டாடுவது என்பது வெறும் கொண்டாட்டத்திற்காக அல்ல. மாறாக, கொண்ட கொள்கை, லட்சியங்களைப் பரப்ப, பாதுகாக்க, அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்த்து, மேலும் மேலும் உழைத்து, புதியதோர் சுய மரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி பொங்கும் புத்தாக்க உலகை உருவாக்குவதற்கே!

‘திராவிட மாடல்’ ஆட்சிக்குப் பெருமை சேர்க்கிறார் நாளும்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் - இயக்க இளைஞரணி செயலாளர் பொறுப்பானாலும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரான நிலையிலும், தேர்தல் பிரச்சாரத்திலும், சீரிய திராவிடர் இயக்கக் கொள்கைப் பிரச்சாரத்திலும் - தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நூற்றாண்டு நாயகர் கலைஞர் ஆகியவர்களின் பாடங்களை சிறப்பாகப் பரப்புரை செய்து, இன்றைய முதலமைச்சரின் தலைமையில் கட்டுப்பாடு காத்து செயல்படும் ஓர் இராணுவத் தளபதி போன்று, கொள்கை முழக்கத்தை அஞ்சாமையும், அடக்கமும் கலந்து பரப்புரை செய்வதில் எடுத்துக் காட்டான வகையில், இன எதிரிகளும், அரசியல் வைரிகளும் அச்சப்படும் அளவில் ‘பளீர் பதில்கள்’ மூலம் முத்திரைப் பதித்து, ‘திராவிட மாடல்’ ஆட்சிக்குப் பெருமை சேர்க்கிறார் நாளும்!

களங்களை கழகக் கொள்கைத் தளங்களாக்கி முழக்கமிடுவதிலும், விவேகமும், வேகமும் உடையவராகி, மூத்தவர்களின் வாழ்த்தையும், இளையவர்களின் பாசத்தையும் நாளும் பெற்று, ஒரு புதுத் திருப்பத்தை தி.மு.க.வுக்குத் தந்து வருகிறார்.

கொள்கைத் தெளிவு, துணிவு, பணிவு, கனிவு!

அவர் நல்ல உடல்நலத்தோடு பல்லாண்டு வாழ்ந்து, திராவிடர் இயக்கக் காவல் அரணாக மிளிருவார் என்ற நல்ல நம்பிக்கையுடன், நாம் நெஞ்சார வாழ்த்தி மகிழ்கிறோம்!

“விமர்சகர்களுக்கு எனது செயல்களே பதிலாக இருக்கும்” என்ற அடக்கமும், ஆழமும் நிறைந்த அவரது பதில் ஒன்றே அவரது கொள்கைத் தெளிவு, துணிவு, பணிவுக்கும், கனிவுக்கும் தக்கச் சான்றுகளாகும்!

“திராவிடம் வெல்லும் - என்றும் வரலாறு அதனைச் சொல்லும்!”

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேற்று (26.11.2024) வடசென்னை மிக உய்ய அனல் மின் திட்டம் நிலை - 3ல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இயக்குநர் (திட்டம்) கருக்குவேல் ராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

வீடியோ எஸ்.எழில் தலைமையில்

142 ‘அ’ வட்டத்தில் 500 பேருக்கு நல உதவிகள் - தெருமுனைக் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - ப.தாயகம் கவி - முதி.எஃபினாமேரி - எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

சென்னை, நவ.27-

சைதை மேற்குப் பகுதி 142 ‘அ’ வட்ட துணை செயலாளர் வீடியோ எஸ்.எழில் தலைமையில் துணை முதல்வர் “உதயநிதி ஸ்டாலின் உதயநாள்” விழாவை முன்னிட்டு 142வது (அ) வட்டத்தில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய மாபெரும் தெருமுனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ, பேச்சாளர் முதி.எஃபினாமேரி சிறப்புரையாற்றுகின்றனர்.

எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, முன்னிலை வகிக்கிறார்.

நவம்பர் 27 மனிதநேய உதயநாள் கழக இளைஞரணி அணி செயலாளர், துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 142வது (அ) வட்ட தி.மு.க. சார்பில் வட்ட துணை செயலாளர் வீடியோ எஸ்.எழில் தலைமையில் சைதாப்பேட்டை, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, (மாரி ஓட்டல் அருகில்) இன்று (27.11.2024 புதன்கிழமை) மாலை 5 மணியளவில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக அரசின் சாதனைகளை எடுத்து ரைத்து மாபெரும் தெருமுனை கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலையிலும், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, மாவட்ட பிரதிநிதிகள் கிண்டி செல்வம், பொன்ஜெய்சிங், பால்கார்ரவி, வட்டக் கழக நிர்வாகிகள் எம்.ஷேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, ஆர்.எல்.காந்தன், பி.தேவிகா, எம்.பாலாஜி, பி.வரதராஜன், எஸ்.பாரதிபாஸ்கர், வே.பிரபு ஆகியோர் வரவேற்பில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக துணை அமைப்பு செயலாளரும், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினருமான ப.தாயகம் கவி, தலைமை கழக இளம் சொற்பொழிவாளர் தி.எஃபினாமேரி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆகியோர் சிறப்புரையாற்ற யுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ்.அரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.பழனி. டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு.கார்த்திகேயன், வெ. கிஷோர்குமார், கே.தாஸ், கே.பிரபு, எம்.கார்த்திக், அ.தமீம்அன்சாரி, தீ.ராஜ்குமார், மாவுமில்ஸ்ரீதர், எம்.மாறன், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் த.மணி, ஜி.ஜே.மோசஸ், ஆர்.எஸ்.ரமேஷ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, ஆட்டோஜான், சார்புசரவணன், மாரியப்பன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி குமார், பூ.பாஸ்கர், ஆர்.தனசேகரன், த.ஜெயராமன், எஸ்.வினோத்குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்.பிரபு, இரா.வெங்கடேசன், ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, வட்ட செயற்குழு உறுப்பினர்கள் பி.சிவகுரு நாதன், திருவாரூர்தமிழ்ச்செல் வன், ரூபேஷ்குமார், அன்புசெழியன், எஸ்.செல்வம், சுரேஷ், சதிஷ், தினேஷ்ராம், விஜயகுமார், ஆர்.செல்வம் உள்ளிட்ட அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பெருந்திரளாக பங்கேற்று இக்கூட்டத்தினை சிறப்பிக்க உள்ளனர்.

இறுதியாக கோயில் எஸ்.மணி, ஆம்பூர்ரவி, என்.ராமு, வி.சுரேஷ் நன்றி கூற உள்ளனர்.

துணை முதல்வர் பிறந்தநாள்: தா.மோகன்குமார் தலைமையில்

168 ‘அ’ வட்டத்தில் 1000 பேருக்கு உணவு!

இரா.துரைராஜ் வழங்குகிறார்!

சென்னை, நவ.27-

சைதை 168 ‘அ’ வட்ட செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி., தலைமையில் கழக இளம்தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 பேருக்கு காலை சிற்றுண்டி உணவினை பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., வழங்குகிறார்.

நவம்பர் 27 மனிதநேய உதயநாள் - கழக இளைஞரணி செயலாளரும் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதி 168வது “அ” வட்டத்தில் 27.11.2024 (புதன்கிழமை) இரண்டு பாகங்களில் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது. முதலாவதாக கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு அரசு பொது மருத்துவமனையில் காலை 9 மணிக்கு 168வது வார்டு மாமன்ற உறுப்பினரும், 168வது “அ” வட்டகழக செயலாருமான தா.மோகன்குமார் தலைமையிலும், இரண்டாவதாக காலை 9.30 மணிக்கு சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள நெருப்பு மேடு பகுதியில் வட்டதுணை செயலாளர் த.பாண்டியன் தலைமையிலும், காலை சிற்றுண்டி உணவினை சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல்கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, வட்டசெயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், எஸ்.ரவி, க.உமாபதி, ஜி.செல்வராஜ், ஜி.யோவான், வே.முருகன், இரா.சுதாபிரியன், எஸ்.கணேசன், வே.ரமேஷ்குமார், கோட்டூர்பாபு, மு.மகேஷ்வரன், ஏ.மஜித்,

168வது “அ” வட்டகழக நிர்வாகிகள் உ. சீனிவாசன், த.பாண்டியன், கி.பாலமுருகன், ஜி.என்.நாராயணன், மீனாபரமா னந்தம், ஈகை அரி, என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், எம்.லிங்கேஸ்வரன், டி.மனோகரன் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.